


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,
நாகர்கோவில் நகராட்சியில் புதிதாக உருவாக்கியுள்ள
சுயஉதவிக்குழுக்களுக்கு, புத்தக பராமரிப்பு பயிற்சி
நாகர்கோவில் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில்
இன்று (20.01.2017) நடைபெற்றது.

செ.வெ.எண்: 51/2017 நாள்: 20.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,**
**சுயஉதவிக்குழுக்களின் ஊக்குநர், பிரதிநிதி மற்றும் குழு உறுப்பினர்களுக்கான புத்தக பராமரிப்பு பயிற்சி**
**இன்று (20.01.2017) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில், பத்மநாபபுரம், குளச்சல் மற்றும் குழித்துறை நகராட்சிகளில் மகளிர் திட்டம் வாயிலாக தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் சுயஉதவிக்குழுக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக, அரசால் பல்வேறு கட்டங்களாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், நாகர்கோவில் நகராட்சியில் புதிதாக உருவாக்கியுள்ள சுயஉதவிக்குழுக்களுக்கு, புத்தக பராமரிப்பு பயிற்சி நாகர்கோவில் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் இன்று (20.01.2017) நடைபெற்றது.

இப்பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், குத்துவிளக்கேற்றி வைத்து தெரிவித்ததாவது:-

தமிழக அரசு மகளிர் திட்டம் வாயிலாக சுயஉதவிக்குழுக்களை உருவாக்கி, அவர்கள் நிலையான தொழிலை துவங்குவதற்காக பல்வேறு கட்டங்களில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம், நாகர்கோவில் நகராட்சியில் ஒதுக்கீடு வரபெற்ற 102 சுய உதவிக்குழுக்களில் 49 சுய உதவிக்குழுக்கள் தற்பொழுது அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதி (A & R Training) மற்றும் குழு உறுப்பினர் (SHG Training) ஆகியோர்களுக்கு புத்தக பராமரிப்பு பயிற்சி இன்று முதல் நடைபெறுகிறது.

பயிற்சியில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்தும், இந்த குழுவில் மேற்கொள்ளப்படும் வரவு, செலவு கணக்குகள் பராமரிப்பது குறித்தும், வெவ்வேறு இடங்களில் நடைபெறும் பயிற்சியில் கலந்து கொள்ளுதல், வங்கிக்கடன் எவ்வாறு பெறுதல், அதனை தவணை முறையில் தவறாமல் செலுத்துவது குறித்தும், பண பரிவர்த்தனை குறித்தும், குழுவின் நிர்வாகிகள் திறம்பட செயலாற்றுவது குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியில் கலந்து கொண்ட அனைத்து குழு உறுப்பினர்களும் பயிற்சியினை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்வதோடு, பிற சுய உதவி உறுப்பினர்களுக்கும் எடுத்துக்கூற வேண்டும். குறிப்பாக அரசால் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு பல்வேறு திட்டத்தின் வாயிலாக நேரடி கடன், வங்கிக்கடன், மானியக்கடன் போன்ற கடன்களை வழங்கி, அவர்களது வாழ்வாதாரம் உயர வழிவகை செய்து வருகிறது.

நமது மாவட்டத்தில் கடந்த ஆண்டில் சுமார் ரூ.118 கோடி கடன் மகளிர் திட்டம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே கடன்கள் பெற்று சுய தொழில் செய்து கொண்டிருக்கும் அனைத்து உறுப்பினர்களும், இதனை சரியான முறையில் வங்கிக்கு

செலுத்தி வருவதால், மேலும் அவர்களுக்கு கடன் வழங்க நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதைபோல் தற்போது புதிதாக துவங்கியுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அனைவரும் திறம்பட செயல்படுவதோடு, புதிய தொழில் துவங்குவதற்கு வங்கிக்கடன் பெற்றால் அதனை தவணை முறையில் சரியாக செலுத்த வேண்டும். அதன் மூலம் உங்களது வாழ்வாதாரம் நிச்சயமாக உயர்வு அடையும் என தெரிவித்தார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், சுயஉதவிக்குழு ஊக்குநர், பிரதிநிதி, உறுப்பினர்கள் ஆகியோர்களின் செயல்பாடுகள் குறித்த புத்தக பராமரிப்பு பயிற்சி கையேடினை வெளியிட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி.ஹெட்சி லீமா அமலினி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் உதவி திட்ட அலுவலர் திரு. எம். ஆறுமுகம், நாகர்கோவில் நகராட்சி ஆணையர் (பொ) திரு. சுரேஷ் குமார், நாகர்கோவில் நகராட்சி நகரமைப்பு அலுவலர் திரு. கெபின்ஜாய், நாகர்கோவில் நகராட்சி சமுதாய அமைப்பாளர் திரு. ஜெயச்சந்திரன் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

---

----வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.